# அன்பு பெருக

சிறுவர் பாடல்கள்



இக்பால் அலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு பெருக



## சிறுவர் பாடல்கள்

இக்பால் அலி

வெளியீடு:
மக்கள் கலை இலக்கிய ஒன்றியம்
18/13 புரணவத்த,
கண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BIBLIOGRAPHY


| | |
|---|---|
| Title | : *ANBU PERUHA* (Children Poems) |
| Author | : Iqbal Ali<br>738 /B, Thombuthar Road,<br>Sainthamaruthu -17 |
| First Edition | : May 2002 |
| Copy Right | : The Author |
| Pages | : 24 |
| Cover Design | : M.C .Ashraff |
| Graphics Design | : I. L.M. Farook, Maruthamunai |
| Publisher | : People Art and Literature Federation<br>18/13 Poorana Watta,<br>Kandy. |
| ISBN No | : 955-8335-01-0 |
| Printed by | : Print- Ex Graphics<br>Tel. 074-477303 |
| Price | : 35/- |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

சிறுவர் இலக்கிய வடிவத்தை நமது நாட்டின் சமூகத் தேவைக் கேற்றவகையிலே பயன்படுத்தி வருபவர்தான் இக்பால் அலி. வெறும் இசைச் சித்தரிப்பான சிறுவர் இலக்கியத்தை அவர் வடிவமைக்க வில்லை. எமது மண்ணின் பகைப்புலத்தையும், சிறுவர்களின் வாழ்க்கை முறைகளையும், ஒழுக்க விழுமியங்களையும், சிறுவர் இலக்கியத்தின் பொருளாக்கி அதை யதார்த்தவியலின் இலக்கியமாகப் பரிணமிக்கச் செய்தவர் கவிஞர் இக்பால் அலி. இவர் சிறுவர் இலக்கியத்தில் ஒரு புதிய கருத்தோவியத்தை அறிமுகப்படுத்தியவர் என்ற சிறப்புக்குள்ளாகின்றார்.

இவரின் "நான் மூன்று சக்கரக்காரன்" என்னும் சிறுவர் பாடல் நூலின் விற்பனை வெற்றியினையும் இலக்கிய வெற்றியினையும் கண்டே எமது மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் எட்டாவது வெளியீடாக அவரது இன்னுமொரு நூலான "அன்பு பெருக" என்னும் சிறுவர் பாடல் நூலை வெளியிடுவதில் களிப்பேருவகை கொள்கிறோம்.

நல்ல பாடல்களைப் புறக்கணித்தால், வருங்காலத்தில் மனித மாண்புகள் புறக்கணிக்கப்படலாம். வருங்கால சமுதாயத்தை உருவாக்கும் சிறார்களிடையே இனவாதமும் அதிதீவிர பாய்ச்சலைக் கொண்டுள்ளது. எம் நாட்டினுடைய சிறுவர் இலக்கியம் சிறுவர்களின் சூழல், விருப்பு, வெறுப்பு, வளர்ச்சி நிலை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு ஆக்கப்பட வில்லையாயின் நல்லதொரு சமுதாயம் உருவாக இடமில்லை. ஆனால், இப்பாடல் நூலில் மகிழ்ச்சிக்குரிய சூழலில் தூய எண்ணத்துடன் சிறார்கள் நட்புறவாய் வளர்வதற்கேற்ப உணர்வுபூர்வமாக எழுப்பட்ட சொல்லோவியங்கள் உள்ளன.

பிறர் பாடாத பாட்டுக்களையெல்லாம் வளைத்துப் பிடித்து மிக எளிய சொற்பதத்தால் சிறுவர்களின் மனதில் பால் வார்க்கும் கவிஞர் இக்பால் அலி மேலும் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் மிகவும் தேவையான நூல்களைத் தர வேண்டுமென எதிர்பார்க்கின்றோம்.

இரா. அ. இராமன்
தலைவர்
மக்கள் கலை இலக்கிய ஒன்றியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

பீ.எம். ஜமாஹிர் B.A (Hons), Dip-in-Ed, M.Phil.
*முதுநிலை விரிவுரையாளர்,*
*மெய்யியல் துறை*
*பேராதனை பல்கலைக்கழகம்.*

சிறுவர் இலக்கியத்தில் நவீன சிந்தனையை முன்வைத்தால் அது பொருத்தமல்ல என்று அர்த்தப்படுத்திக் கொண்டு ஒரு சிலர் இருப்பது இயல்பு. நவீன சிந்தனைப் போக்கோடு வெளிவரும் படைப்பிலக்கியங்கள் அனைத்தும் அந்தரத்தில் பூசாரி கையை விரித்தவுடன் கீழே விழுந்து விடுவதல்ல. எதற்குமொரு காலதேவன் இருக்கின்றான் என்பது உண்மை. ஒவ்வொரு படைப்பிலக் கியத்திற்கும் ஒவ்வொரு கடுந்தவமும் அர்ப்பணிப்பும் இருக்கின்றன. கவிஞர் இக்பால் அலியும் பயங்கரமான எதிர்வினைகளை எல்லாம் கடந்து இன்னுமொரு சிறுவர் பாடல் நூலை எமக்களிப்பதனூடாக தனக்குரிய இடத்தை பிடித்துக் கொள்கிறார்.

*"இன்ஜின் இன்ஜின் இன்ஜின்*
*ஏன்பெரு மூச்சு விடறே*
*எத்தனை பாரத்தை இழுத்துக் கொண்டு*
*வருகிறேன் நான் தெரியுமா?*
*ஆனைக்குட்டி இரண்டு அல்சேஷியன் பன்னெண்டு*
*மந்திரிமார்கள் நாலு, மகாராஜாக்கள் எட்டு"*

இப்பாடல் திரையுலகில் "வள்ளியின் செல்வன்" என்னும் படத்தில் இடம் பெற்றது. எழுதியவர் கொத்தமங்கலம் சுப்பு. இது புதுக்கவிதைப் பாடலாக வெளிவந்தன. சிறுவர் இலக்கியத்தில் மனதை கொள்ளை கொண்டவையும் கற்பனையின்பமிக்க அருமையான பாடல் இது. 1972 ல் ஷண்முக சுப்பையாவின் "கண்ணன் என் தம்பி" என்னும் 25 பாடல்கள் புதுக்கவிதை சிறுவர் நூலாக வந்தன. (குழந்தை இலக்கிய வரலாறு)

ஓடி விளையாடும் பிள்ளைகளுக்கும் ஓய்வு பெற்ற பெரியவர்களுக்கும் இருக்கும் வேறுபாடு, வளர்ச்சி! பெரியவர்கள் வளர்ந்து விட்டவர்கள். இனி மேற்கொண்டும் வளர்ச்சி பெற முடியாதவர்கள். தளர்ச்சிதான் அவர்களை எதிர்நோக்கியிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் குழந்தை வளர்பவர்கள் என்று கலாநிதி பூவண்ணன் அவர்கள் தமது குழந்தை இலக்கிய வரலாற்று நூலில் ஒரு இடத்தில் குறிப்பிடுகின்றார். இவை இதற்கும் பொருந்தலாம். மரபு சார் பழைமையான கற்பனைகளை வைத்துக் கொண்டு பாடுவதைக் காட்டிலும் புதிய முறையில் தற்காலத்துக்கேற்ப நவீன சிந்தனைகளைத் தூண்டக் கூடிய பாடல்களைத்தான் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியிருக்கிறது.

அதனால்தான் தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழியியல் துறை விரிவுரையாளர் கே. ரகுபரன் அவர்கள் கூட சமகால நிகழ்வுகளில் கவனம் செலுத்தும் மு.பொ, திமிலை மகாலிங்கம், த. துரைசிங்கம், சு.வில்வரத்தினம் முதலானோருடன் கவிஞர் இக்பால் அலியும் ஒத்த படைப்பாளியாக விளங்குகின்றார் என்று இக்பால் அலியின் "நான் மூன்று சக்கரக்காரன்" நூல் வெளியீட்டு விழாவில் விமர்சனவுரை நிகழ்த்திய போது குறிப்பிடுகின்றார். மேலும் அவர் "சமகால சமூக உணர்வில் இருந்து எந்த இலக்கியவாதியாலும் விடுபட முடியாது என்கிறார்.

உண்மையிலே இந்தத் தனித்துவம் எமது நாட்டின் சமகாலப் போர்க் காலப் பின்னணியோடும், துன்பம் நிறைந்த வாழ்க்கைக் கலாசாரச் சூழலோடும் இயல்பாக முகிழ்ந்து வந்தவை. யதார்த்தத்திற்கு புறம்பானவற்றை முன்னிலைப்படுத்தி எமது கலாசாரப் பண்பாட்டியியல் முறைகளுக்கு ஒவ்வாதவற்றை இக்பால் அலி பாடும் பொருள்களாக எடுத்துக் கொள்வதில்லை.

இன்று இலங்கையில் சிறுவர் இனத்துக்கே ஆபத்தான காலம். போரின் காரணமாக இனவாத வக்கிரக உணர்வுகள் எம் நாட்டில் வாழுகின்ற அந்தந்த இனங்களினூடாக மிக இலகுவாக சிறார்களின் மனதில் புகுந்து அழுத்தத்தைக் கொடுக்கின்றன. இந்நிலையை மாற்றியமைப்பது என்பது கடினமான ஒன்று. எனினும் முதலில் சிறார்களின் மனதில் சமாதானத்திற்கான நம்பிக்கை ஒளிக்கீற்றை எளிதில் பதியம் போட்டால் மாத்திரம்தான் சமாதானத்திற்கு இயைவான காலப் பரிமாணங்களைக் காணலாம் என்கின்ற நம்பிக்கை உணர்வையே கவிஞரின் பாடல்கள் உணர்த்துகின்றன.

*ஒன்று பட்டு ஒழுகுவோம்*
*ஐயம் இன்றிப் பழகுவோம்*
*அமுது என்ற அன்புதான்*
*நாட்டில் என்றும் நிலைக்குமே*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காலத்தைப் பொறுத்தவரை சிறார்களின் நலன்கருதி பாட வேண்டிய பாட்டு வரிகள்தான் இவை.

இனிய நட்புக்கும், இன நல்லுறவுக்கும் இறுக்கமான தொடர்பையும், மனமகிழ்ச்சி மற்றும் அன்பை வலியுறுத்தும் புன்னகை என்பது உயிரோடு தழுவிய உயர்ந்த சாசனம். மென்மை கொண்ட இதயமுள்ளவர்களிக்கப்பட்ட அன்பின் அணிகலன்; இக்பால் அலியின் பாடல்களிலும் சிறார்களின் சிரிப்பைவெளிப்படுத்துகின்ற உண்மையின் ரகசியம் பரந்து பட்ட அர்த்தத்தில் தொனிக்கிறது. வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும் என்பார்கள். ஒரு நல்ல சிறுவர் பாடலாசிரியன் உருவாக்கத்திற்கு அல்லது நல்ல பாடலின் உருவாக்கத்திற்கு மிகவும் அவசியம் சிந்தனை. அவர் சக்திமிக்க சிந்தனையாளராக இருப்பதற்கு சிரிப்புப் பாட்டு முக்கியத்துவம் பெறுகிறது.

*ஒருவர் முகம் பார்க்கும்போது*
*சிரிப்பு முக்கிய கடமையாம்*
*அன்பு காட்டும் சிரிப்புத்தானே*
*கூடி வாழ நல்லதாம்*

*சாந்தி சமாதானங்கள்*
*சிரிப்பில் தானே உள்ளது*
*மழலை போல மனிதனும்*
*சிரித்து வாழ வேணுமாம்*

இந்த வரிகள் உணர்த்தும் சிரிப்பின் மகிமைகள் இன ஐக்கியத்திற்கு பலமூட்டுவதாக உள்ளன.

இத்தொகுதியில் இக்பால் அலியின் பாணியில் வெளிவரும் பாடல் மனதிற்கு மகிழ்ச்சி ஊட்டுகிறது. அது சிறார்களுக்குரிய அனுபவங்களையும், சிந்தனைகளையும் இணைந்து தொடும்போது நெஞ்சுக்கு உறுதியளிக்கிறது. ஒரு புறத்தில் இன நல்லுறவு வெளிப்படுகிறது என்றால், மறுபுறத்தில் தொழில் சார் குணநல அம்சங்கள் சிறுவர் உள்ளத்தில் இலகுவாக ஆழப்பதிந்து விடுகின்ற சிந்தனையின் பார்வைகள் விரிவடைகின்றன. எனவே, சிறார்களின் தேவையறிந்து பல சிறந்த பாடல்களை இயற்றித் தந்துள்ள இக்பால் அலி எமது சூழலுக்குப் பொருந்தக் கூடிய இன்னும் பல சிறுவர் பாடல் நூல்களை தர வேண்டுமென எதிர்பார்க்கின்றேன்.

*பி.எம். ஜமாஹிர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை

போர் அற்ற நாடுதான் எல்லோருக்கும் வாழச் சிறந்தது என்று சிறார்களின் மனதில் அழுத்தமாகப் பதிய வேண்டிய சூழல் இது. உரிய காலத்தில் உரிய மாற்றங்களைச் செய்யத் தவறியதன் காரணமாகத்தான் இலங்கையில் சிறுவர்கள் என்ன மனித சமுதாயமே வாழ முடியாதுள்ளது. சிறார்களின் உள எண்ணக்கருவின் ஒவ்வொரு வளர்ச்சிக்கேற்ப நடை முறை மாற்றங்களையும் காலத்துக்குக் காலம் ஒளிவிடும் சிந்தனைத் தெளிவையும் அவர்களுக்கு கொடுப்பதால் மட்டும்தான் அதற்கான பல வித விளைச்சலைக் காணலாம்.

அறிந்த கல்விப் பரப்புக்களிலிருந்து அறியாக் கல்வி அழகு முறைகளை காட்ட முற்படும்போது சில மரபுகளை உடைப்பது என்பது மரபை ஊனப்படுத்துவதற்கல்ல. அந்த மரபிலிருந்து உயிர் கொண்டெழுகின்ற பார்வை தெளிவுபட்டு விரியும்போது அர்த்தமுள்ள விடயங்களை முழுமையாக அறிந்து கொள்வதற்காகும். ஆனாலும் மரபுசார்புடையவர்கள் இதுதான் ஆதார வடிவம் என்று அசட்டு அபிமானங்கள் வைத்துக்கொண்டு பிதற்றித் திரிவது பெரிதும் பொருத்தமல்ல.

எனினும் என்னுடைய "நான் மூன்று சக்கரக்காரன்" என்னும் சிறுவர் பாடல் நூலை மரபு சார்புடையவர்கள் அதிலுள்ள நவீன யதார்த்தவியற் கருத்துக்களை ஏற்றுக் கொண்டது மட்டுமல்ல என்னுடைய முயற்சிகளுக்கு அனுசரணையாக விமர்சன ரீதியிலும், நுகர்வோரிடத்திற்கு எடுத்துச் செல்லவும் துணை நின்றார்கள். அவ்வகையில மற்றுமொரு நூலை என்னால் தர முடிகிறது.

சிறுவர் பாடல்களிலும் தனித்துவத்தை வைத்துக் கொள்ளுமாறு ஆலோசனை தந்துதவிய கவிஞர் அல் அஸூமத் அவர்களுக்கும், என் எழுத்து சிறுவர் இலக்கிய உலகில் உலா வருவதற்கு துணை நின்ற அனைத்துச் சிநேகிதர்களுக்கும், இந்நூல் வெளிவருவதற்கு பலவகைளிலும் ஒத்துழைப்பு நல்கிய எம். எம். எம். றிழ்வான் அவர்கள் உட்பட மற்றும் சக நண்பர்களுக்கும் நன்றிகள்.


*இக்பால் அலி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு பெருக

அன்பு பெருக வாழுவோம்
ஒன்று சேரப் பாடுவோம்
சமா தானம் என்பதை
நிலை நிறுத்தி ஆடுவோம்



புறாவைப் போல பறப்போமே
புதுசா உலகம் படைப்போமே
சமா தானக் கொடியினை
ஏற்றி விளை யாடுவோம்

துன்பம் பசி போக்கியே
நாட்டு நலம் காப்போமே
செழுமை காணும் நிலத்திலே
புதிய பயிரை நடுவோமே

ஒன்று பட்டு ஒழுகுவோம்
ஐயம் இன்றிப் பழகுவோம்
அமுது என்னும் அன்புதான்
நாட்டில் என்றும் நிலைக்குமே

# நன்றி

நன்றி என்னும் மொழியாலே
நன்மை உண்டு வாழ்வினிலே
செய்யும் செயலை மறவாதே
மகிமை பெற்று வாழ்வாயே

படைத்த இறைவன் ஒருவனுக்கு
சிரசு வணங்கி நிற்கும் நீ
உன்னை வளர்த்த பெற்றோரை
ஆசி கூறி போற்றணுமே

குருவை மதிக்கப் பழகனும்
அன்பில் தூய்மை படரனும்
பணிவால் உயர்வை வெல்லவே
மதிப்பால் நன்மை பெருகனும்

வாலை வாலை ஆட்டிடும்
நன்றி உள்ள நாய்போல
நன்றி மிக்க செய்கையே
இனிது என்று நடப்போமே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டுநகர் மாஸ்டர் சிவலிங்கம்

சிறுவர் பேசும் மொழியினிலே
உள்ளம் கவரும் கதைகளை
அழகு தமிழில் பேசிடும்
மட்டுநகர் சிவலிங்கமாம்

பள்ளி செல்லும் சிறுவர்கள்
சுற்றி இருந்தும் எந்நாளும்
சுரண்டிச் சுரண்டி கேட்டிட
நல்ல கதைகள் சொன்னவராம்

கதையைப் போல தன்னையும்
உருவை மாற்றி நடிப்பிலே
பேறு கண்ட நடிகராம்
நாடு புகழும் கதைஞராம்

அறிவு கூறும் கதைகளையே
இனிமை சொட்டத் தந்தவராம்
கேட்டு மகிழ்ந்த யாவருமே
அவரை நினைத்துப் பார்ப்போமே






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்திரிக்கோல்

கத்திரிக் கோலால் வெட்டியே
அழகாய் பூக்கள் செய்வோமே
சின்னக் கத்திரி வாங்கியே
தாளை வெட்டிப் பழகுவோம்.



அம்மா அம்மா எப்போதும்
சீலை வெட்டித் தைத்திடும்
துண்டு துணியை எடுப்போமே
தினமும் வெட்டிப் பார்ப்போமே


பெரிய பிள்ளை யானதுமே
ஆடைகள் தைத்து உழைப்போமே
வருவாய் ஈட்டும் தொழிலாலே
பயன்கள் அதிகம் பெறுவோமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிப்பு

ஒருவர் முகம் பார்க்கும்போது
சிரிப்பு முக்கிய கடமையாம்
அன்பு காட்டும் சிரிப்புத்தான்
சேர்ந்து வாழ நல்லதாம்.



முகத்தை நீட்டிக் கொள்வதோ
வாயை மூடி நிற்பதோ
நல்ல ஈகை இல்லையே
மழலை போல சிரித்திடு

சாந்தி சமாதானங்கள்
சிரிப்பில் தானே உள்ளது
மழலை போல மனிதனும்
சிரித்து வாழ வேணும்டா

மனதை விட்டுச் சிரித்தாலே
நோய்கள் ஏதும் வரமாட்டா
நாளும் பொழுதும் சிரித்திடு
வசந்தம் உண்டு வாழ்வினிலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூவர்

பள்ளிக் கூடம் விட்ட போது
மழை வந்து பொழிந்தது
மூன்று பேரின் கையிலே
ஒரு குடை இருந்தது



தனி ஆளாய் இருந்தால்நான்
குடையை விரித்துப் போயிருப்பேன்
மூன்று தோழர்கள் என்பதாலே
கடையில் ஒதுங்கி நிற்கிறோம்.

மழையில் நனைந்து சென்றாலும்
பிரிந்து சென்று பழக்கமில்லை
இப்போது குடையும் தேவையில்லை
மூவரும் நனைந்தே செல்வோமே




மூவரின் எண்ணம் போலவே
மழையும் விட்டு ஓய்ந்தது
வேறு சமயமானாலும்
இணைந்தே நாங்கள் படிக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டு வாழ்க்கை

குமார் அந்தி வேளையில்
அயல் வீடு போவதேன்?
சிகா னோடு பாடங்களை
கேட்டு அறிந்து படிக்கவே



ரவி சுதா இருவரும்
அங்கே வந்திருப்பார்கள்
சிகான் உம்மா எங்களை
ஒன்று போல கவனிப்பார்

சாதி பேதம் இன்றியே
குடும்ப நலம் வினவுவார்
விருந்து உப சாரத்திலும்
முந்திக் கொண்டு நிற்பாரே


குமார் ரவி யாவரும்
சிகான் வீட்டுப் பிள்ளையாம்
குருவிக் கூட்டைப் போலவே
நாமும் கூடி வாழ்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டி. வி

நல்ல நல்ல டி.வி
நான் பார்க்கும் டி.வி
அம்மா சொல் கேட்டால்
மூடி வைக்கும் டி.வி



கண்ணின் மணி திறந்து
கண் கவரும் காட்சிதனை
கண்டு கண்டு மகிழும்
பொழுது போக்கும் டி.வி

நல்லதொரு பொருள்எனினும்
தீய தென்னும் டி.வி
நல்லரிய காட்சி மட்டும்
நாமும் விரும்பிப் பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளி நாடு சென்ற தந்தையே

அன்பு மிகு தந்தையே
அம்மாவும் நானும் இலங்கையிலே
தன்னந் தனியே வாழ்வதோ
எம்மைக் காண வருவீரோ



தோளில் வைத்துத் தூக்குவாய்
வண்டியில் ஏற்றித் தள்ளுவாய்
கேட்டது வாங்கித் தந்திடுவாய்
அன்பு காட்டிப் பேசிடுவாய்

வண்ண வண்ண உடைகளும்
வாங்கி வாங்கி அனுப்புவாய்
வறுமை இன்றி வாழ்வதற்காய்
உழைத்து பணம் அனுப்புவாய்

வெளிநாடு போனதினாலேயே
கடிதம் மட்டும் பார்க்கிறேன்
உந்தன் முகம் காணவே
கடிதம் எழுதிப் போடுகிறேன்


தந்தை உந்தன் பிள்ளைநான்
எம்மைக் காண வருவீரோ
உந்தன் வரவை எதிர் பார்த்தே
எண்ணி எண்ணி கழிக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாற்காலி

நாலு காலு நாற்காலியே
சின்னஞ் சிறிய நாற்காலியே
சின்னத் தம்பி விரும்பிடும்
பசுமை மிக்க நாற்காலியே



பள்ளி சென்று இருப்பதும்
உந்தன் அழகு மடியினிலே
கல்விக் கலைகள் யாவுமே
உன்னில் அமர்ந்தே கற்கிறோம்.


அதிகம் நின்று இருந்தாலும்
கால்கள் கடுக்கச் செய்யுமாம்
எமக்கு உதவி செய்திடும்
அன்பு மிக்க நாற்காலியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புத் தூது

துவக்குச் சப்தம் கேட்குது
நெஞ்சம் கூடத் துடிக்குது
உடம்பு கூட நடுங்குது
குப்புற விழுந்து படுத்திடு
என்ற உலகை மாற்றவே
அன்புத் தூது விடுகிறோம்



அப்பாவியான நாங்களும்
போரிலான வாழ்வினிலே
நிம்மதி ஒன்றும் இல்லாமல்
மனசு நொந்து வாடுகிறோம்

பெரியோர் நீங்கள் யாவருமே
சிறியோர் நாங்கள் வாழவே
க‌ ணை எம்மீது காட்டுங்கள்
கொடிய போரே வேணாமென
சிறியோர் நாமும் கேட்கின்றோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலம்

இரு சக்கர வண்டியினில்
ரவி கல்முனை போனானாம்
வாகனம் இல்லா நிலையினிலே
சலீம் தவித்து நின்றானாம்.

சலீமின் முக வாட்டத்தினை
ரவி அறிந்து கொண்டானாம்.
சலீமின் அருகே சென்று அவன்
என்ன யோசனை என்றானாம்.



ஊருக்குப் போக வழியின்றி
கணக்க நேரம் காத்திருக்கேன்
என்றே அவன் கூறியதும்
உதவி செய்ய முனைந்தானாம்.

ரவி செய்த உதவியினை
நித்தம் மறவேன் என்றானாம்
தமிழ் முஸ்லிம் உறவுக்கே
இவர்கள் புதிய பாலமாம்

நாமும் அவர்கள் போலவே
நித்தம் நித்தம் வாழ்வோமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைதானம்



வீரம் பெற்ற நானும் - உறவில்
உந்தன் வீட்டுப் பிள்ளை
எந்தன் மேனி மேலே - அழகு
பச்சைப் புற்கள் செழிக்கும்

முத்தம் இட்டுக் கொள்வாய் - என்னில்
ஏறி மிதித்துக் கொள்வாய்
நித்தம் உருண்டு பிரளும் - பெரும்
பரந்த பரப்பு என்பாய்

எந்த விளையாட்டும் -என்
சொந்த விளையாட்டே
புகழ் ஈட்டும் வீரன் - உலகம்
முழுவதும் பாடும் பாட்டு

நாடும் வீரமும் கூடி - நற்
பெருமையினை ஈட்டலாம்
உடர் கம் பெற்று - நீண்ட
ஆயுட் காலம் வாழலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்கள்

குற்றம் குறை செய்திருந்தால்
அம்மா அப்பா அடித்தாலும்
காலடியே இரங்கி நிற்போம் -நாங்கள்



ஒழுக்கம் மாண்பு தவறிவிட்டால்
படித்த பயன் போகுமென்று
அஞ்சியே வாழ்ந்து வந்தோம் - நாங்கள்

பொருட்கள் வாங்கச் செல்லும்போது
நல்ல பொருட்கள் வாங்கியே
நல்ல பெயரை எடுப்போமே -நாங்கள்

தோழர் அடித்தான் என்பதற்கு
திருப்பி அடிக்க மாட்டோமென
நட்புப் பாடம் புகட்டுவோமே - நாங்கள்

உணவை உண்ணும் போதினிலே
அருகே நிற்கும் யாவருக்கும்
பகிர்ந்து உண்டு மகிழ்வோமே - நாங்கள்

கலவன் பாடசாலை போலவே
ஒன்று கலந்து வாழ்கின்றோம்.- நாங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன்

புலி என்ற பெயர் எடுத்த
வெண்பாப் பாவலரே
தங்கத் தமிழில் சங்கை முழங்க
கல்விச் செல்வம் தந்தவராம்

சுடரும் புலவர் என்று கூறி
சோனகர் பெருமை பாடிட
'புதுகுஷ்ஷாம்' உரை தந்த மணியே
கவி போல் இனிமை உடையவராம்.

மருதமுனை மண்ணினிலே
பிறந்த அறிஞர் பெருமணியே
அரிய பெரிய மேதைகளால்
போற்றிப் புகழும் கவிமணியே


செய்யுட் கவிதைகள் படைத்தவராம்
அறிவு நூட்கள் தந்தவராம்
அன்பாய் பழகும் வல்லவராம்
ஆ. மு. ஷரிபுத்தீனை
நாமும் ..டித்து மகிழ்வோமே.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# புனிதம் மிகு நோன்பு மாதம்



முப்பது நோன்பு கடமைதனை
பெற்றோர் போன்று செய்திடுவோம்
காலை யிலிருந்து மாலைவரை
புனித நோன்பைக் காத்திடுவோம்.



நோன்பு மாதம் வந்ததுமே
பெருநாள் நாளை காத்திடுவோம்
புத்தாடை வாங்கும் பணிதனிலே
மகிழ்வுடன் நாமும் சென்றிடுவோம்



நோன்பு மாதச் சிறப்பினைப்போல்
வேறு மாதங்கள் இல்லையே
உலகோர் புரிந்து வாழ்வதற்கு
புனிதம் மிகு மாதமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகை

சின்ன மகளே அருகே வா
கையில் உள்ளதை எடுத்து வா
என்ன செய்திகள் உள்ளன
என்ன தலைப்புகள் உள்ளன.

குறிப்பை எடுத்து வைத்திடு
தினமும் பத்திரிகை படித்திடு
ஊர் உலகம் அறிந்திடு
ஊடகமாய் நீயும் ஆகிவிடு



பெரிய ஆளாய் ஆனதும்
இதழியல் பாடம் படிக்கலாம்
வீணாய் கழிக்கும் நேரத்தை
பத்திரிகை படித்துப் பார்க்கலாம்



கசக்கிச் சுருட்டி விளையாடும்
சின்னக் குழந்தை நீ தானே
பள்ளிப் பாட நூலைப்போல்
பத்திரிகையை நீயும் படிப்பாயே



அருமை மகளே இங்கே வா
அழகு பெ... ...ய இங்கே வா
சுடச் சுடச் செய்திகளை
கேட்டு அறிந்து படிக்க வா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிமுகம்

இக்பால் அலியின் முதற் சிறுவர் பாடல் நூலான "நான் மூன்று சக்கரக்காரன்" புதிய தளத்தில் பிரவேசித்து சிறுவர் இலக்கியத்தில் தடம் பதித்துள்ளது. சிறுவர் இலக்கியத்தின் வளர்ச்சியும் பாடலின் புதுமையும் இயல்பாகவே நகர்பவை: இக்பால் அலி எந்தப் பொருளையும், விடயத்தையும் யதார்த்தவியலோடு தான் பார்க்க முனைகிறார். அதுதான் தற்காலத்துத் தேவையும் கூட.

நமது நாட்டின் சிறுவர் வாழ்வுக்கு முக்கியமானது சமாதானமாகும். அதைவிடுத்து ஒவ்வாத விடயங்களைப் பற்றி எல்லாம் எழுதிப் பெயர் எடுப்பதை விட எழுதாமல் சும்மா இருப்பது சுகம். இக்பால் அலியின் பாடல் வரிகள் எந்தச் சந்தர்ப்பமாயிருந்தாலும் பெரு ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சமாதானத் தூதை வேண்டியே அது பிரதிபலிக்கின்றது. சிறார்களின் உளம் சாந்தி பெறாமல் அமைதி இல்லை. இச்சூழலில் மனிதம், ஒற்றுமை, அன்பு, அறம் சார்ந்த கருத்துக்களையும் விழுமியங்கயையும் கூறுகின்ற மற்றுமொரு சிறுவர் பாடல் நூலைத் தருகின்றார் கவிஞர் இக்பால் அலி.

பகை உணர்வு மலிந்த சமூகத்தில் புரளும் போது சிறுவர்களுடைய உளப்பண்புகளும் பாதிப்படைந்து தத்தளிக்கின்ற சந்தர்ப்பத்தில் கவிஞர். சிறுவர் குலத்தின் மீது அவர் கொண்டுள்ள அக்கறையை அத்தனை பாடல்களிலும் தெளிவாகக் காட்டுகிறது இந்நூல் எனலாம்.

தன்னைப் பற்றி மட்டுமல்லாது ஈழத்தில் சிறந்து விளங்கும் பிரபலமான படைப்பாளிகள் பற்றிப் பேசுவதற்கும், கருத்துச் சொல்வதற்கும், ஆய்வு ரீதியான கருத்துக்களை ஒன்று திரட்டி ஒரு எழுத்தாளனை கவனிப்புக்குரியவனாக்கும் வகையிலே ஒரு முதற்படி மனிதராக விளங்குகின்ற இக்பால் அலியின் சிறுவர் இலக்கியப் பயணம் நீடித்துச் சிறக்க எனது இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

**ம.்.மூது தௌபீக் B.A**
**தலைவர்,**
**இஸ்லாமிய வழிகாட்டல் மையம்**
**ர.்.மத் நகர்.**

ISBN : 955-8335-01-0

PRINT-EX Kandy, 074-477303

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org